# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases**

**(CBI Cases Relating to Banks and Financial Institutions)**

**Chennai - 600 001.**

| | |
|---|---|
| Calendar Case | : C.C. No.06/2006 |
| Deposition of witness for | : PW-25 (LW-30) |
| Name of the witness | : Mr. P.Mohanraj |
| Father's name | : Mr. A.S.D.Pandian |
| Age | : 66 years |
| Occupation | : Retired as Principal District Judge, TNSJ |
| Address | : No.3, Model School Road, Thousand Lights, Chennai - 600 006. |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 6th day of November 2025.

---

**(A1, A5 present. A3 company rep. by A5 & A6. A4, A8, A9 Charge abated. A7 Split up in CC No.07/2018. Other accused absent. Petition u/s 317 CRPC filed and allowed).**

**முதல் விசாரணை :**

நான் இளநிலை சிவில் நீதிபதியாக 1995ல் பணியில் சேர்ந்தேன். பின்னர் முதன்மை அமர்வு நீதிபதியாக 2019ல் பணிஓய்வு பெற்றேன். இதற்கு முன்பு 11 ஆவது சென்னை பெருநகர நீதித்துறை நடுவராகப் பணியாற்றியபோதுகுற்றவியல் பெருநகர தலைமை நீதித்துறை நடுவர் அவர்களிடமிருந்து முரளிதரன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோருடைய ஆர்.சி.எண்.எம்.ஏ.4/2004 என்ற வழக்கில் குற்ற மன்னிப்பு வழங்குவதற்கான

நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி அறிக்கை பெறப்பட்டது. மேற்படி அறிக்கை எண்.ஆர்.ஓ.சி.எண்.1734/2005 நாள் 28.7.2005 தேதியடப்பட்டது. மேற்படி முரளிதரன் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் 20ஆவது பெருநகர நீதித்துறை நடுவர் அவர்களிடம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவையும் பெறப்பட்டது. மேலும் இந்த வழக்கில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையும் பெறப்பட்டது. பிறகு 11ஆவது நீதித்துறை பெருநகர நடுவர் நீதிமன்றத்தில் பல்வகை மனு எண்.2319/2005 ல் மேல்நடவடிக்கைகள் தொடரப்பட்டது. பின்னர் எதிரிகள் இருவருக்கும் காவல் துறையினர் மூலம் அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு அதன்பேரில் 9.9.2005 அன்று மதியம் 2.30 மணியளவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டது. அதன்பேரில் முதல் எதிரி சுப்பிரமணி சம்பந்தமான நடவடிக்கைகள் 2.45 மணிக்கு தொடங்கி 3.10 மணியளவில் முடிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் எதிரி முரளிதரன் சம்பந்தமான நடவடிக்கைகள் 3.15 மணிக்குதொடங்கி 3.45 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி முரளிதரன் சமபந்தமான சான்றிட்ட நடவடிக்கைகள் அ.சா.ஆ.57 (2 தாள்கள்) ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி சுப்பிரமணியன் சமபந்தமான சான்றிட்ட நடவடிக்கைகள் அ.சா.ஆ.58 (2 தாள்கள்) ஆக குறியீடு செய்யப்பட்டது. பிறகு ஆவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் 20ஆவது பெருநகர நீதித்துறை நடுவரிடம் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டுமென்றும், வழக்கு பற்றிய அனைத்து சங்கதிகளையும் மறைக்காமல் விசாரணை நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க வேண்டுமென்றும், அவ்வாறு சாட்சியமளிக்கத் தவறும்பட்சத்தில் அவர்கள்மீது குற்ற வழக்கு தொடரப்படும் என்ற எச்சரிக்கை செய்து பின்னர் நான் மனநிறைவு பெற்றபிறகு எதிரிகளுக்கு குற்ற மன்னிப்பு வழங்கினேன். அதனை

எதிரிகளும் ஒப்புக்கொண்டு குற்ற மன்னிப்பை ஏற்றுக் கொண்டார்கள். நடவடிக்ககைள் முடிந்த பிறகு இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நான் மேற்கொண்ட நடவடிக்கை சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட ஆவணங்களை, 20 ஆவது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களின் சான்றிட்ட நகல்கள் அனைத்தையும் இணைத்து கனம் 8ஆவது முதன்மை சிபிஐ சிறப்பு நீதிமன்றத்திற்கு 4.8.2005 தேதியிட்ட இணைப்புக் கடிதத்துடன் அனுப்பி வைத்தேன். நான் இந்த வழக்கில் பிறப்பித்த பொது மன்னிப்பு சான்றிட்ட உத்தரவு அ.சா.ஆ.59 (2 தாள்கள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>1ம் தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் சுப்பிரமணியன் மற்றும் முரளிதரன் ஆகியோரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற நீதிதுறை நடுவரின் நடவடிக்கையில் எதிரிகள் கைது செய்யப்பட்டதாக உள்ளது. ஆனால் அவர்கள் பிணையில் வெளியில் வந்து என்னுடைய அழைப்பாணையின் பேரில் வந்தார்களா அல்லது கைது செய்யப்பட்டபின் சிபிஐ வசமிருந்து நீதிமன்றத்திற்கு வந்தார்களா என்று எனக்கு தெரியாது. இந்த இருவருக்கும் அறிவுரைகூறும்போது நீர் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி சாட்சியம்அளிக்காவிடில் உங்களை இந்த வழக்கு முதல் தகவல் அறிக்கையுள்ள குற்றங்களுக்கு தனியாக ஒரு வழக்கும், மற்றும் பொய்சாட்சியம் அளித்த குற்றத்திற்கு மற்றொரு வழக்கும் ஆக 2 வழக்குகள் உங்கள் மீது தொடரப்படும் என்ற குறிப்பான அறிவுரையை அளித்தேனா என்றால் இல்லை. ஆனால் நிபந்தனைப்படி நடக்காவிட்டால் இந்த குற்றத்தை பொறுத்தமட்டிலும் உங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படும் என்று மட்டும் கூறியுள்ளேன். இந்த இருவருக்கும் அளித்த

மன்னிப்பு உத்திரவில் இந்த இருவருடைய வாக்குமூலங்களிலும் அவர்கள் தங்களை குற்றத்தில் உட்படுத்திக்கொள்ளாதவகையில் (Exculpatory) அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன். எனது உத்திரவில் எதிரிகளுக்கு குற்றம் புரிய Intention இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் அவர்கள் தெரிந்தே செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். எதிரிகளை என் முன்பு ஆஜராக சம்மனை சிபிஐ மூலம்தான் கொடுத்தேனா என்று ஆவணத்தை பார்த்தால் சொல்ல இயலும். முதல் தகவல்அறிக்கையை பார்த்தேன். அதில் இந்த 2பேரும் எதிரிகளாக இல்லை. 2எதிரிகள் மீது அதனால் சுமத்தப்பட்ட முதல்நிலையிலான குற்றசாற்று எனக்கு தெரிந்திருக்கவில்லை. 2எதிரிகளும் சிபிஐயின் Informal custodyல் இருந்தார்கள் என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கும்போது தன்னிச்சையாக அளிக்கவில்லை என்றாலும், என்முன்னிலையில் ஆஜரானபோது தன்னிச்சையாக ஆஜராகவில்லை என்று சொன்னால் சரியல்ல.

(2ம் எதிரியின் வழக்கறிஞர் மேற்கண்ட 1ம் எதிரியின் குறுக்குவிசாரணையை Adopt செய்கிறார்.)

Taken down before me in the open court read over to the witness and acknowledged by him/her to be correct.

VADIVELU T P Digitally signed by VADIVELU T P Date: 2025.11.06 17:54:02 +0530

06.11.2025 XI Additional Special Judge for CBI Cases.